வானமளாவுவ மாமரமே என்னை வா என்றழைக்கும் தபோவனமே
குரு நாதனின் நாமம் ஞானானந்தமே அங்கே நாடிச்செனறால் ப்ரஹ்மானந்தமே

தேனூரும் பெண்ணை ஆரோரமே எங்கள் தேவன் இருக்கும் தபோவனமே -திருக்
கோவிலூர் குடி கொண்ட கோபாலனே இங்கே காவி உடை கொண்டு
வந்துள்ளனே

பழனி திருசெந்தூர் போகவேண்டாம் அங்கே பன்னிரு கையனை தேட வேண்டாம்
நம் பக்கம் அமர்ந்திருக்கும் ஞானானந்தனே பன்னிருகையன் சந்தேகம்
வேண்டாம்

சங்கர பீடத்தில் வந்தவராம் அவர் ஸாதுக்கள் சங்கத்தில் பெரியவராம்
சங்கடங்கள் நீங்க வேன்டுவோமே என்று ஸன்மார்க போதனை செய்பவராம்

தேவா தேவா என்ற சொல் இனிக்கும் அங்கே தேவரும் காணா இன்பம்
த்வொனிக்கும்
சவாத வரம் அதிலே பிறக்கும் மனம் சாந்தி அடைய ஓம் என்றொலிக்கும்

கந்தனும் கண்ணனும் கலந்துவிட்டான் அங்கே கருணையின் வடிவமாய் தோன்றி
நின்றான்
நமதண்ணல் ஞானானந்தன் ஆற்றல்களை ஹரிதாசனால் செப்பிட ஆகிடுமோ